# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

| | | |
|---|---|---|
| பிரிவு | : | TNPSC Group II தேர்வு |
| பாடம் | : | இந்திய தேசிய இயக்கம் |
| பகுதி | : | **போராட்டங்களின் பல்வேறு முறைகள்** |
| | | பல்வேறு செயல்களினுடைய சகாப்தம்& உடன்படிக்கை |


**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள்வடிவில்தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக்குறிப்புகளுக்கானகாப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# சுதேசி இயக்கம்

**சுதேசி இயக்கம் (1905):**

- சுதேசி இயக்கம் பல்வேறு திட்டங்களை கொண்டதாகும். அரசுப்பணி, நீதிமன்றங்கள், பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றைப் புறக்கணித்தல், அந்நியப் பொருட்களை புறக்கணித்து சுதேசப் பொருட்களை வாங்கி ஆதரித்தல், தேசியப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் நிறுவி தேசியக் கல்வியை வளர்த்தல் ஆகியன இத்திட்டங்களில் அடங்கும்.
- சுதேசி இயக்கம் ஒரு அரசியல் பொருளாதார இயக்கமாகும்.
- சுதேசி இயக்கம் மாபெரும் வெற்றி பெற்றது. வங்காளத்தில் பெரும் நிலச்சுவான்தார்களும் பங்கேற்றனர். மகளிரும், மாணவரும் மறியலில் ஈடுபட்டனர். அந்நிய காகிதத்தாலான கையேடுகளை மாணவர்கள் புறக்கணித்தனர்.
- சுதேசி இயக்கத்தை ஒடுக்குவதற்கு அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. இதற்காக பல சட்டங்கள் இயற்றப்பட்டன. வந்தே மாதரம் பாடுவதற்கு தடை விதிக்கப்பட்டது.
- பள்ளிகளும், கல்லூரிகளும் தங்களின் மாணவர்கள் இதில் கலந்து கொள்ளாமலிருக்க நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தப்பட்டன. இல்லையென்றால் உதவித்தொகை நிறுத்தப்படும் என்று எச்சரிக்கையும் விடப்பட்டது. சிலர் தங்களது அரசு பணிகளை இழந்தனர். தீவிரவாத தலைவர்களான பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய், பிபின் சந்திரபால், அரவிந்த் கோஷ் போன்றோர் சிறையில் அடைக்கப்பட்டனர்.
- சுதேசி இயக்கத்தின் போது அரவிந்த் கோஷ் அரசியல் விடுதலையே ஒரு நாட்டின் உயிர் மூச்சு என்று முழங்கினார். இரவீந்திரநாத் தாகூரால் பாடப்பட்ட அமர் சோனா பங்ளா என்ற பாடல் வங்காள தேசத்தின் தேசிய கீதமாக மாறியது.

- ❖ சுதேசி இயக்கத்தை இந்தியா முழுவதும் பரப்பியவர்கள்
  - i) பூனா மற்றும் பம்பாய் - திலகர்
  - ii) பஞ்சாப் - லாலா லஜபதிராய், அஜித்சிங்
  - iii) டெல்லி -சையது ஹைதர் ராஜா
  - iv) மதராஸ் - சிதம்பரம் பிள்ளை.

**தீவிரவாதிகளின் சாதனைகள்**

- ❖ சுயராஜ்யத்தை பிறப்புரிமையாக முதலில் கோரியவர்கள் தீவிரவாதிகளாவர்.
- ❖ விடுதலை இயக்கத்தின் மக்களை பெருமளவில் ஈடுபடுத்தியது தேசிய இயக்கத்தின் சமூக அடிப்படை மேலும் விரிவாக்கப்பட்டது.
- ❖ முதன் முதலில் அனைத்து இந்திய அரசியல் இயக்கத்தை (சுதேசி இயக்கம்) அமைத்து நடத்தியது போற்றத்தக்கதாகும்.

**6. முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்படுதல் (1906):**

- ❖ 1906 டிசம்பரில் இந்தியா முழுவதிலுமிருந்த முஸ்லீம்கள், முஸ்லீம் கல்வி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக டாக்கா நகரில் கூடியிருந்தனர்.
- ❖ டாக்காவை சேர்ந்த நவாப் சலி முல்லா முஸ்லீம்களின் நலனுக்காக ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கூறி 1906 டிசம்பர் 30ம் நாள் அகில இந்திய முஸ்லீம் லீக்கை தோற்றுவித்தார்.
- ❖ தொடக்கத்தில் பிரிட்டிஷார் இதற்கு ஆதரவு காட்டினர். மின்டோ மார்லி சீர்திருத்தங்களின் போது முஸ்லீம்களுக்கென தனித்தொகுதியை கேட்டுப்பெற்றது அவர்களது சாதனையாகும்.

**7. லக்னோ ஒப்பந்தம் (1916):**

- ❖ 1916 ஆம் ஆண்டு லக்னோ காங்கிரஸ் மாநாட்டின் போது இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தீவிரவாதிகள், மிதவாதிகள் மீண்டும் ஒன்றிணைந்தனர்.
- ❖ 1916 ஆம் ஆண்டு லக்னோ ஒப்பந்தம் கையெழுத்தானது இதன்படி, காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் பிரிட்டிஷாருக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. லக்னோ ஒப்பந்தம் இந்து - முஸ்லீம் ஒற்றுமைக்கு சாதகமாக எடுக்கப்பட்ட முக்கிய முடிவாகும்.

**8. தன்னாட்சி இயக்கம்(1916):**

- ❖ 1916 ஆம் ஆண்டு இரண்டு தன்னாட்சி கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

வாய்மையே வெல்லும்

❖ ஏப்ரல் மாதத்தில் பூனாவில் திலகர் தன்னாட்சிக் கழகத்தை தொடங்கினார்.

❖ செப்டம்பரில் அன்னி பெசண்ட் அம்மையார் மதராஸில் மற்றொரு தன்னாட்சி கழகத்தை நிறுவினார். தன்னாட்சி இயக்கத்தின் முக்கிய குறிக்கோள் பிரிட்டிஷ் பேரரசுக்குள்ளேயே இந்தியாவிற்கு தன்னாட்சி பெறுவதாகும்.

❖ சுதந்திரம் என்பது அனைத்து நாடுகளுக்கும் உள்ள இயற்கையான உரிமை என இருவருமே நம்பினர். காங்கிரசுடன், முஸ்லீம் லீக்கும் சேர்ந்து போராடின. திலகரின் தன்னாட்சி இயக்கம் மகாராஷ்டிரத்தில் கவனத்தை செலுத்தியது.

❖ அன்னி பெசண்டின் தன்னாட்சி இயக்கத்தை இந்தியாவின் இதரபகுதிகளில் செயல்பட்டது.

❖ 1917 ஆகஸ்டு 20 ஆம் நாள் இங்கிலாந்து அயலுறவு அமைச்சர் மாண்டேகு இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

❖ இந்தியாவில் படிப்படியாக தன்னாட்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்படும் என்று உறுதி கூறினார். இந்த ஆகஸ்டு அறிக்கை தன்னாட்சி இயக்கத்தை முடிவிற்கு கொண்டு வந்தது.

**9. காந்தியடிகள் காலம் (1917 - 1947):**

❖ மகாத்மா காந்தி இக்காலகட்டத்தில் தேசிய இயக்கத்தின் தன்னிகரற்ற தலைவராக விளங்கினார். அவரது கொள்கைகளான அகிம்சை மற்றும் சத்தியாகிரகம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக செயல்படுத்தப்பட்டன.

❖ தேசிய இயக்கத்தை காந்தி மக்கள் இயக்கமாக மாற்றினார்.

❖ மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869 அக்டோபர் 2 ஆம் நாள் குஜராத்தில் போர்ப் பந்தர் என்ற ஊரில் பிறந்தார். இங்கிலாந்தில் சட்டம் பயின்ற அவர் 1893 ல் தனது கட்சிக்காரர் (Client) தாதா அப்துல்லா என்பவரின் வழக்கு சம்பந்தமாக தென் ஆப்பிரிக்கா சென்றார். அங்கு நிலவிய இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரான போராட்டத்தில் 20 ஆண்டுகள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

❖ தென் ஆப்பிரிக்காவில் நடால் இந்திய காங்கிரஸையும்(Natal Indian Congress) இந்தியன் ஒப்பீனியன் (Indian Opinion) என்ற பத்திரிக்கையையும் ஆரம்பித்தார். முதல் சட்ட மறுப்பு இயக்கத்தை பிரிட்டிஷாருக்கு எதிராக நடத்தினார். தென் ஆப்பிரிக்காவில் காந்திக்கு

உதவியாக C.F ஆண்ட்ரூஸ் என்பவர் உடனிருந்தார்.

- இறுதியாக 1915 ல் இந்தியா திரும்பினார். பின்னர் இந்திய தேசிய இயக்கத்தில் முழுமையாக பங்கேற்று வழி நடத்திச் சென்றார்.
- ராஜ்குமார் சுக்லா என்பவரின் வேண்டுகோளுக்கு இணங்க 1917 ல் பீகாரில் சம்பரான் என்ற இடத்தில் ஐரோப்பிய அவுரிச் செடி (Indigo Plant) பண்ணையாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்ட அவர், அங்கு தான் தனது சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையை முதன் முதலில் இந்திய மண்ணில் பரிசோதித்துப் பார்த்தார். இந்தியாவில் இந்த சம்பரான் சத்யாகிரகம் காந்தியின் முதல் சட்டமறுப்பு இயக்கமாகும். விவசாயிகள் தங்கள் நிலங்களில் 3/20 பங்கு (தின்காதியா முறைப்படி) நிலத்தில் கட்டாயம் அவுரிச்செடி பயிரிட வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டனர். மேலும் விலையை ஆங்கிலேய வியாபாரிகளே நிர்ணயம் செய்ததால், விவசாயிகள் போராட்டம் செய்தனர். காந்தி கலந்து கொண்டதால் போராட்டம் தீவிரமடைந்து இறுதியில் ஆங்கில அரசு விசாரணைக்காக கமிட்டி அமைத்து அதில் காந்தியை உறுப்பினராக்கியது. காந்தி இந்த போராட்டத்தில் வெற்றி பெற்றார். இந்த போராட்டத்தில் ராஜேந்திர பிரசாத், மகாதியோ தேசாய்,J.B. கிருபாலினி ஆகியோர் காந்திக்கு ஆதரவாக போராடினர்.
- 1918 ல் குஜராத்தில் கேதா மாவட்டத்தில் மற்றொரு சத்யாகிரக போராட்டத்தை காந்தி நடத்தினார்.
- வறட்சியினால் மோசமான விளைச்சலால் பாதிக்கப்பட்ட குடியானவர்களுக்கு நிலவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதற்காக இப்போராட்டம் நடைபெற்றது. இது கேதா சத்யாகிரக போராட்டமாகும். இது இந்தியாவில் காந்தியின் முதல் ஒத்துழையாமை இயக்கமாகும். இப்போராட்டத்தின் போது சர்தார் வல்லபாய் படேல் மற்றும் இந்துலால் யாக்னிக் போன்றோர் காந்தியின் சீடர்களாக மாறினர். ஓரளவிற்கு இப்போராட்டம் வெற்றி பெற்றது.
- பிறகு 1918ல் அகமதாபாத் மில் தொழிலாளர்களின் சம்பள உயர்வு சலுகை (Bonus) போராட்டத்தில் கலந்து கொண்டு 35% பிளேக் போனஸ் வேண்டி சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார்.
- இது காந்தியின் முதல் பட்டினிப் போராட்டமாகும். இறுதியில்

போராட்டம் வெற்றி பெற்று தொழிலாளர்களுக்கு 35% பிளேக் போனஸ் கிடைத்தது.

- இதுவே அகமதாபாத் மில் போராட்டமாகும்.
- சாம்பரான், கேதா, அகமதாபாத் போன்ற சிறிய போராட்டங்கள் தாம் மகாத்மா காந்தியை மக்களிடம் நெருக்கமாக கொண்டு சென்றன. அவர்களது பிரச்சனைகளை காந்தியும் புரிந்து கொள்ள முடிந்தது. இவ்வாறு காந்தி மக்களின் தலைவர் நிலைக்கு உயர்ந்தார்.

## 10. ரௌலட் சட்டம் (1919):

- அரசுக்கு எதிரான சதி வேலைகளை ஆய்வு செய்வதற்காக நீதிபதி சர் சிட்னி ரௌலட் என்பவரது தலைமையில் 1917 ல் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கைப்படி 1919 மார்ச் திங்களில் ரௌலட் சட்டம் மத்திய சட்டசபையில் கொண்டு வரப்பட்டது.
- இச்சட்டப்படி சந்தேகத்தின் பேரில் எவரையும் கைது செய்யலாம். விசாரனை இன்றி கைது செய்து சிறையிலடைக்கலாம். இத்தகைய கைதுகளை எதிர்த்து விண்ணப்பமோ அல்லது மேல்முறையீடோ செய்ய முடியாது. இச்சட்டம் கருப்பு சட்டம் என்று கருதப்பட்டது. இச்சட்டத்திற்கு பலத்த எதிர்ப்புகள் தோன்றின.
- இந்த ரௌலட் சட்டத்திற்கு எதிராக காந்தி முதல் அகில இந்திய போராட்டத்தை 1919 ஏப்ரல் 6 ஆம் நாள் துவக்கினார்.
- இந்தியா முழுவதும் (ஹர்த்தால்) மறியல் பேராட்டங்கள் நடைபெற்றன. நாடு முழுவதும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. டெல்லிக்கு அருகில் மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டார். பஞ்சாபின் முக்கிய தலைவர்களான டாக்டர் சத்யபால் மற்றும் டாக்டர் சைபுதீன் கிச்லு ஆகிய இருவரும் அமிர்தசரஸில் கைது செய்யப்பட்டனர்.

## 11. ஜாலியன் வாலாபாக் படுகொலை ( 13 ஏப்ரல் 1919):

- 1919 ஏப்ரல் 13 ஆம் நாள் நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலை இந்திய விடுதலை இயக்கத்தில் ஒரு முக்கிய திருப்பு முனையாகும். ரௌலட் சட்டத்திற்கு எதிரான சத்யாகிரகப் போராட்டத்திற்கு பஞ்சாபில் பெருத்த ஆதரவு திரண்டது.
- வன்முறையை எதிர் நோக்கிய பஞ்சாப் அரசின் லெப்டிணன்ட் கவர்னர் மைக்கேல் ஓ டையர், வன்முறையை ஒடுக்க ஜெனரல்

டையர் தலைமையிலான ராணுவத்திற்கு அதிகாரம் அளித்தார்.

- ஜெனரல் டயர் பொதுக்கூட்டங்களுக்கு தடை விதித்து அரசியல் தலைவர்களை கைது செய்தார்.
- ஏப்ரல் 13 ஆம் நாள் பைசாகி என்ற அறுவடைத்திருநாளன்று ஜாலியன் வாலாபாக் பூங்காவில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஜெனரல் டயர் தனது படையுடன் சென்று எவ்வித முன்னறிவிப்புமின்றி கூட்டத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார். துப்பாக்கிச் சூடு 10 முதல் 15 நிமிடங்கள் நீடித்தது. துப்பாக்கி தோட்டாக்கள் தீர்ந்த பிறகு தான் அது நிறுத்தப்பட்டது.
- அதிகாரப்பூர்வ தகவலின்படி 379 பேர் கொல்லப்பட்டனர். 1137 பேர் படுகாயமடைந்தனர்.
- இந்தப்படுகொலையை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன. இந்த படுகொலையை விசாரணை செய்ய ஹண்டர் ஆணையம் (Hunter Commission) அமைக்கப்பட்டது.
- ரவீந்திரநாத் தாகூர் தமது "**நைட்வுட்"** பட்டத்தை துறந்தார். ரௌலட் சட்டத்திற்கு எதிரான சத்யா கிரகம் வன்முறையில் முடிந்ததால் காந்தி அதனை ஏப்ரல் 18, 1919ல் நிறுத்தினார்.

## 12. கிலாபத் இயக்கம்:

- முதல் உலகப் போரில் துருக்கியின் தோல்வியால் துருக்கி பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டு துண்டு துண்டாக்கப்பட்டு பிரிட்டிஷாரால் நிர்வகிக்கப்பட்டது.
- உலக முகமதியர்களின் தலைவரான காலிபா பதவியிலிருந்து கீழ் இறக்கப்பட்டார். செவ்ரஸ் உடன்படிக்கையும் (1920) முஸ்லீம்களுக்கு பெருத்த அவமானமாகக்கருதப்பட்டது.
- மேலும் பிரிட்டன் துருக்கியை நடத்திய விதம் உலக முஸ்லீம்களை குறிப்பாக இந்திய முஸ்லீம்களை புண்படுத்துவதாக இருந்தது. எனவே அவர்கள் கிலாபத் இயக்கத்தை தொடங்கினர்.
- மௌலானா அபுல் கலாம் ஆசாத், எம்.ஏ அன்சாரி, சைபுதீன் கிச்லு, அலி சகோதர்கள் இந்த இயக்கத்தை தலைமையேற்று நடத்தினார்கள்.
- கிலாபத் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 1919 அக்டோபர் 19ம் நாள் கிலாபத் தினம் அனுசரிக்கப்பட்டது.
- நவம்பர் 23 ஆம் நாள் மகாத்மா காந்தியின் தலைமையில்

இந்துக்களும் முஸ்லீம்களும் கலந்து கொண்ட ஒரு மாநாடு கூடியது.

- ❖ நாட்டின் விடுதலைக்கு இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஒன்றுபடுத்த வேண்டியதன் கட்டாயத்தை மகாத்மா காந்தி உணர்ந்திருந்தார்.
- ❖ பின்னர் கிலாபத் இயக்கம்1920 ல் மகாத்மா காந்தி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்துடன் ஒன்று கலந்தது.

**13. ஒத்துழையாமை இயக்கம்: (1920 -22):**

- ❖ ரௌலட் சட்டம், ஜாலியன் வாலாபாக் படுகொலை, கிலாபத் இயக்கத்தை தொடர்ந்து மகாத்மா காந்தி தனது ஒத்துழையாமை இயக்கம் பற்றிய திட்டத்தை அறிவித்தார்.
- ❖ 1920 டிசம்பரில் நடைபெற்ற நாக்பூர் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடும் இதனைஏற்றது.

**செயல்திட்டங்கள்:**

- ❖ பட்டங்களையும் சிறப்பு தகுதிகளையும் துறத்தல்.
- ❖ உள்ளாட்சி அமைப்பு உறுப்பினர் பதவிகளிலிருந்து விலகுதல்.
- ❖ 1919 ஆம் ஆண்டு சட்டப்படி நடைபெறவிருந்த தேர்தல்களை புறக்கணித்தல்.
- ❖ அரசு விழாக்களை புறக்கணித்தல்
- ❖ நீதிமன்றங்கள், அரசு பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றை புறக்கணித்தல்.
- ❖ அயல் நாட்டு பொருட்களை புறக்கணித்தல்.
- ❖ தேசிய பள்ளிகள், கல்லூரிகள், தனியார் பஞ்சாயத்து நீதிமன்றங்கள் போன்றவற்றை நிறுவுதல்.
- ❖ சுதேசி பொருட்களையும் கதர் துணிகளையம் மக்களிடையே பிரபலப்படுத்துதல்.

- ❖ மகாத்மாக காந்தி தனக்கு பிரிட்டிஷ் அரசு கொடுத்த சிறப்பு பட்டங்களை துறந்து இந்திய இயக்கத்தை தொடங்கி வைத்தார். 1921 ல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு வந்த போது மறியல் போராட்டங்கள் நடைபெற்றன.
- ❖ உத்திரப்பிரதேசத்தின் கோரக்பூர் மாவட்டத்திலுள்ள சௌரி சௌரா என்ற இடத்திலுள்ள காவல் நிலையத்தை **பிப்ரவரி 5, 1922** என்று முற்றுகையிட்ட மக்கள் கூட்டம் காவல்நிலையத்திற்கு தீ வைத்தது. 22 காவலர்கள் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர். இதுவே சௌரி சௌரா சம்பவம் என்றழைக்கப்படுகின்றது. இந்த வன்முறை சம்பவத்தால் 1922 பிப்ரவரி 11 ஆம் நாள் ஒத்துழையாமை

இயக்கத்தை காந்தி இடையிலே நிறுத்துவதாக அறிவித்தார்.

### ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கியத்துவம்

- குடியானவர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பெண்கள் போன்ற சமுதாயத்தின் அனைத்து பிரிவினரும் பங்கேற்ற முதலாவது மக்கள் இயக்கமாக இது திகழ்ந்தது.
- இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் தேசியம் பரவ வழி வகுத்தது.
- கிலாபத் இயக்கமும் இதனுடன் ஒன்றினைந்ததால் இந்து முஸ்லீம் ஒற்றுமையின் உச்சகட்டமாக இது திகழ்ந்தது.
- இந்திய மக்களுக்கு எத்தகைய துன்பத்தையும் தாங்கும் சக்தி உண்டு என்பதையும், எவ்வித தியாகத்திற்கும் அவர்கள் தயாராக உள்ளனர் என்பதையும் இது எடுத்து காட்டியது.

### 14. சுயராஜ்ய கட்சி (1923)

- ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து 1922 டிசம்பரில் நடைபெற்ற கயா காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் பிளவு ஏற்பட்டது. சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு, அஜ்மல் கான் போன்ற தலைவர்கள் காங்கிரசுக்குள்ளேயே 1923 ஜனவரி 1 ஆம் நாள் சுயராஜ்ய கட்சியை தோற்றுவித்தனர்.
- சுயராஜ்ய கட்சியினர், சட்டமன்ற தேர்தல்களில் போட்டியிட்டு உள்ளிருந்து கொண்டே அரசாங்கத்தை நிலைகுலையச் செய்ய முடிவு செய்தனர். இவர்கள் சுயராஜ்ஸ்டுகள் (Swarajists) என்று அழைக்கப்பட்டனர்.
- 1923 நவம்பரில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில் சுயராஜ்ய கட்சி குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றது. மத்திய சட்டமன்றத்தில் மோதிலால் நேரு கட்சி தலைவராகவும், வங்காள சட்ட மன்றத்தில் சி.ஆர்.தாஸ் கட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1925 ஜூனில் சி.ஆர். தாஸ் மறைந்த பிறகு, சுயராஜ்ய கட்சி பலவீனமடைந்தது.
- ஆனால் வல்லபாய் படேல் இராஜேந்திர பிரசாத்,C. ராஜ கோபாலச்சாரி மற்றும் M.A அன்சாரி ஆகியோா் சட்டமன்றங்களில் நுழைவதை எதிர்த்தனர். புறக்கணிப்பு மற்றும் ஒத்துழையாமையை கடைபிடித்தனர். இவர்கள் மாற்றத்தை விரும்பாதவாகள் (No Changers) என்றழைக்கப்பட்டனர்.

## 15. சைமன் குழு (1927):

- ❖ 1919 ஆம் ஆண்டு சட்டம் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அதன் செயல்பாடுகள் மறு ஆய்வு செய்யப்படவேண்டும் என்று விதித்திருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே - 1927 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் மறு ஆய்வுக்குழு ஒன்றை நியமித்தது.
- ❖ இக்குழுவின் தலைவரான சர் ஜான் சைமன் என்பவரது பெயராலே சைமன் குழு என்று இது அழைக்கப்பட்டது. இதில் **இடம் பெற்றிருந்த ஏழு உறுப்பினர்களும் ஆங்கிலேயர்களாவர்.** இதில் ஒரு இந்திய உறுப்பினர்கூட இடம் பெறாமையால், இந்தியாவுக்கு வந்தடையும் முன்பே இக்குழுவிற்கு பலத்த எதிர்ப்புகள் தோன்றின. காங்கிரஸ் உள்ளிட்ட பல அரசியல் கட்சிகள் இக்குழுவை எதிர்த்தன.
- ❖ 1928 பிப்ரவரி 3- ஆம் நாள் இக்குழு பம்பாய் வந்திறங்கிய போது நாடு முழுவதும் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. சென்ற இடமெல்லாம் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களும், **"சைமனே திரும்பிப்போ"** என்ற முழக்கங்களும் இக்குழுவை அதிர வைத்தன. 1928 அக்டோபர் 30-ஆம் நாள் லாகூரில் லாலா லஜபதிராய் தலைமையில் சைமன் குழு எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றது. அப்போது நடைபெற்ற போலிஸ் தடியடியால் லஜபதிராய் படுகாயமடைந்தார். ஒரு மாதம் கழித்து அவர் உயிர் பிரிந்தது.
- ❖ 1930 மே மாதம் சைமன் குழு அறிக்கை வெளியிட்டது. இரட்டையாட்சியின் குறைபாடுகளை இது சுட்டிக்காட்டியது. அதற்குப்பதில் மாநில சுயாட்சியை இக்குழு பரிந்துரைத்தது. 1935 ஆண்டு இந்திய அரசு சட்டத்திற்கு இக்குழுவின் அறிக்கை அடிப்படையாக விளங்கியது.

## 16. நேரு அறிக்கை 1928:

- ❖ இதற்கிடையில் இங்கிலாந்தின் அயலுறவுச் செயலாளர் பிர்கன் ஹெட் பிரபு அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியலமைப்பு உருவாக்க முடியுமா என்று கேட்டு இந்தியர்களுக்கு சவால் விடுத்தார்.
- ❖ இந்த சவாலை ஏற்ற காங்கிரஸ் 1928 பிப்ரவரி 28-ல் அனைத்துக்கட்சி கூட்டத்தைக் கூட்டியது. எதிர்கால இந்தியாவின் அரசியல் அமைப்பு சட்டம் ஒன்றை வரைவதற்கு எட்டுப்பேர் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டது.
- ❖ இதன் தலைவராக மோதிலால் நேரு நியமிக்கப்பட்டார்.

- ❖ இக்குழுவின் அறிக்கையே "நேரு அறிக்கை" எனப்படுகிறது. இந்த அறிக்கையின் சிறப்புக் கூறுகளாவன.
  - நிலையாக டொமினியன் (Swaraj) அந்தஸ்து வழங்கப்படுதல்.
  - மத்தியில் முழுப் பொறுப்பு வாய்ந்த அரசு.
  - மாகாணங்களுக்கு சுயாட்சி.
  - மத்திய மாகாண அரசுகளுக்கிடையே தெளிவான அதிகாரப் பகிர்வு.
  - மத்தியில் இரண்டு அவைகள் கொண்ட சட்டமன்றம்.
- ❖ முஸ்லீம் லீக் தலைவரான முகமது அலி ஜின்னா, நேரு அறிக்கை முஸ்லீம் மக்களின் நலனுக்கு எதிரானது என்று கருதினார். அகில இந்திய முஸ்லீம்கள் மாநாட்டை கூட்டிய ஜின்னா தனது பதினான்கு அம்ச கோரிக்கைகளை வெளியிட்டார்.

## 17. சட்டமறுப்பு இயக்கம் (1930 - 34):

- ❖ 1929 டிசம்பர் மாதம் லாகூர் காங்கிரஸ் மாநாடு கூடியது. ஜவஹர்லால் நேரு இந்த மாநாட்டுக்கு தலைமை வகித்தார். **"பூரண சுயராஜ்யம்" அல்லது "முழுச்சுதந்திரம்"** குறித்த தீர்மானம் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.
- ❖ நேரு அறிக்கையை அரசு ஏற்க மறுத்தமையால், காங்கிரஸ் சட்ட மறுப்பு இயக்கத்தை தொடங்குவது என முடிவு செய்தது.
- ❖ 1930 ஜனவரி 26 ஆம் நாள் இந்திய சுதந்திர தினமாக அனுசரிக்கப்பட்டது. அது முதல் ஜனவரி 26- ம் நாள் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினமாக அனுசரிக்கப்பட்டது. விடுதலைக்குப் பின் 1950-ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த தினமாக ஜனவரி 26- ஆம் நாள் குடியரசு தினமாக கொண்டாடப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 18. தண்டியாத்திரை:

- ❖ காங்கிரசின் இரண்டாவது கட்ட போராட்டத்துக்கான களம் தயாராக இருந்தது. 1930 மார்ச் 12- ம் நாள் காந்தி தனது புகழ்பெற்ற தண்டியாத்திரையை தொடங்கினார்.
- ❖ அவரால் தெரிவு செய்யப்பட்ட **78 சீடர்கள்** பின் தொடர உப்பு சட்டங்களை மறுப்பதற்காக அவர் புறப்பட்டார்.
- ❖ 200 மைல்கள் நடந்து 1930 ஏப்ரல் 5-ம் நாள் தண்டி கடற்கரையை சென்றடைந்தார்.

- ஏப்ரல் **6- ம் நாள் உப்புச்சட்டங்களை மீறியதன்** மூலம் சட்ட மறுப்பு இயக்கத்தை அவர் முறைப்படி தொடங்கி வைத்தார்.

**சட்ட மறுப்பு இயக்கத்தின் திட்டங்கள்:**

- உப்பு வரிக்கான சட்டத்தை மீறுதல் (உப்பு சத்யாகிரகம்)
- நீதிமன்றங்களை புறக்கணித்தல்
- அரசுப்பணியிலிருந்து விலகுதல்
- வரி செலுத்த மறுத்தல்
- வழக்கறிஞர்கள் வாதாடுவதை கைவிடுதல்.
- அந்நிய துணிக்கடைகள் மற்றும் மதுக்கடைகளை புறக்கணித்து மறியல் செய்தல்
- உப்பு சத்யாகிரகத்தை தமிழ்நாட்டில் திருச்சியிலிருந்து வேதாரண்யம் வரை நடத்திச் சென்றவர் C. ராஜகோபாலச்சாரி ஆவார். மலபார் பகுதியில் K. கேளப்பன், (கோழிக்கூட்டிலிருந்து பையனூர் வரை)
- சிட்டகாங்காக்கில் சூர்யா சென் தலைமையில் ஆயுதக்கடத்தல் சட்ட மறுப்பு இயக்கத்தின் போது நடைபெற்றது.
- பெஷாவரில் எல்லை காந்தி கான் அப்துல் காஃபர் கான் செஞ்சட்டை (Red Shift Movement) இயக்கம் என்னும் அமைதிப் போராட்டத்தை நடத்தினார்.
- 1930ல் சரோஜினி நாயுடும், காந்தியின் மகனான மணிலாலும் இணைந்து தர்சனா உப்பு தொழிற்சாலையில் போராட்டம் நடத்தினர்.
- நாகலாந்தின் ராணி கைடின்லியூ என்பவர் போராட்டம் நடத்தி 1932ல் கைது செய்யப்பட்டு ஆயுட்கால சிறை தண்டனைப் பெற்றார்.

### 19. வட்டமேசை மாநாடுகள் (1930 - 1932):

- 1930 நவம்பரில் லண்டனில் நடைபெற்ற முதல் வட்டமேசை மாநாட்டை காங்கிரஸ் புறக்கணித்தது.
- 1931 ஜனவரியில் பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு காங்கிரஸ் மீது விதித்திருந்த தடையை அரசு விலக்கியதோடு, தலைவர்களையும் சிறையிலிருந்து விடுதலை செய்தது. 1931 மார்ச் 8- ம் நாள் காந்தி இர்வின் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன்படி மகாத்மா காந்தி சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைக்கவும் இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ளவும் ஒப்புக் கொண்டார். 1931 செப்டம்பரில் இரண்டாம் வட்டமேசை மாநாடு லண்டனில் நடைபெற்றது. மகாத்மா

காந்தி இதில் கலந்து கொண்டுவிட்டு பெருத்த ஏமாற்றத்துடன் நாடு திரும்பினார். முழு சுதந்திரம், வகுப்பு பிரச்சனை போன்றவற்றுக்கான எந்த தீர்வும் இந்த மாநாட்டில் காணப்படவில்லை.

- ❖ 1932 ஜனவரியில் சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தொடங்கப்பட்டது. மகாத்மா காந்தி, சர்தார் பட்டேல் போன்ற தலைவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டனர். காங்கிரஸ் கட்சியும் தடை செய்யப்பட்டது.
- ❖ சைமன் குழுவின் அறிக்கையை விவாதிக்க கூட்டப்பட்டதே வட்டமேசை மாநாடு. சைமன் குழு அறிக்கை வட்ட மேசை மாநாடுகளின் விவாதத்தின் அறிக்கையின் அடிப்படையில் அமைந்ததே இந்திய அரசு சட்டம் 1935 ஆகும்.

**20. வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் மற்றும் பூனா ஒப்பந்தம்(1932):**

- ❖ முதல் வட்டமேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மை நிலையை எடுத்துரைத்த அம்பேத்கார் அவர்களுக்கு தனித்தொகுதி ஒதுக்கப்பட வேண்டும் என்று கோரினார்.
- ❖ 1932 ஆகஸ்டு 16-ம் நாள் பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்டு தனது **"வகுப்புக் கொடை"** யை அறிவித்தார். இதன்படி தாழ்த்தப்பட்ட மக்கள் தனி வகுப்பினராக கருதப்பட அவர்களுக்கு தனித்தொகுதி வழங்கப்படும் என்று கூறப்பட்டது **(71 இடங்கள்)** . "வகுப்புக் கொடையை" எதிர்த்து மகாத்மா காந்தி 1932 செப்டம்பர் 20-ஆம் நாள் எரவாடா சிறையில் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினார்.
- ❖ இறுதியில் டாக்டர் அம்பேத்காருக்கும் காந்திக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதுவே **"பூனா ஒப்பந்தம்"** எனப்படுகிறது **(148 இடங்கள்).** பிரிட்டிஷ் அரசாங்கமும் இதனை ஏற்றுக்கொண்டது.
- ❖ 1932 -ல் மூன்றாவது வட்டமேசை மாநாடு முடிவடைந்தது. மறுபடியும் காங்கிரஸ் இதனை புறக்கணித்தது.
- ❖ இருப்பினும் 1933 மார்ச்சில் பிரிட்டிஷ் அரசாங்கம் வெள்ளை அறிக்கையை வெளியிட்டது.
- ❖ 1935 -ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் வெள்ளை அறிக்கையின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது.

**21. இரண்டாம் உலகப்போரும் தேசிய இயக்கமும் (1939 - 1945):**

- ❖ 1935 -ம் ஆண்டு இந்திய அரசு சட்ட விதிகளின் படி 1937ல் தேர்தல் நடந்தது. இந்தியாவின் ஏழு

மாகாணங்களில் காங்கிரஸ் அமைச்சரவைகள் அமைக்கப்பட்டன. 1939 செப்டம்பர் முதல் நாள் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது.

❖ மக்களை கலந்து ஆலோசிக்காமலேயே, பிரிட்டிஷ் அரசு இந்தியாவை போரில் ஈடுபடுத்தியது. காங்கிரஸ் இச்செயலை கடுமையாக எதிர்த்தது. தங்களது எதிர்ப்பை காட்டும் வகையில் **1939 டிசம்பர் 12-ம் நாள் மாகாணங்களில் பதவியிலிருந்த காங்கிரஸ் அமைச்சரவை பதவி விலகின இதனை முஸ்லீம் லீக் "விடுதலை நாளாகக்" கொண்டாடியது.** 1940 மார்ச்சில் முஸ்லீம் லீக் பாகிஸ்தான் கோரிக்கையை முன் வைத்தது.

## 22. தனிநபர் சத்தியாகிரகம்:

❖ இரண்டாம் உலகப்போரின் போது இந்தியர்கள் ஆதரவைப் பெறுவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் 1940 ஆகஸ்ட் 8- ம் நாள் " ஆகஸ்டு" சலுகையை அறிவித்தது. போருக்குப் பின் புதிய அரசியலமைப்பை வரைவதற்காக இந்தியப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. காந்தி இதனை ஏற்க மறுத்து, தனி நபர் சத்தியா கிரகத்தை தொடங்க முடிவு செய்தார்.

❖ தனிநபர் சத்தியாகிரகம் என்பது வன்முறையற்ற குறைந்த அளவில் ஒரு அடையாளமாக நடத்தப்பட்ட இயக்கமாகும். சத்தியாகிரகத்தில் ஈடுபடுபவர்களை காந்தியே தேர்வு செய்தார். **முதலில் தனிநபர் சத்யாகிரகத்தில் ஈடுபட்டவர் ஆச்சார்ய வினோபா பாவே ஆவார்.** அவருக்கு மூன்று மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அடுத்து ஜவஹர்லால் நேரு தனிநபர் சத்யாகிரகத்தில் ஈடுபட்டு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார். தனிநபர் சத்யாகிரகம் 15 மாதங்கள் நீடித்தது. மூன்றாவதாக சர்தார் வல்லபாய் படேல் தனிநபர் சத்யாகிரகத்தில் ஈடுபட்டார்.

## 23. கிரிப்ஸ் தூதுக்குழு (1942):

❖ போர்க்காலத்தில் நிலவிய மோசமான சூழ்நிலையைக் கருதி இந்தியர்களின் ஒத்துழைப்பை பெறும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கம் 1942 மார்ச் 23- ம் நாள் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது.

### கிரிப்ஸின் முக்கியப் பரிந்துரைகள்:

❖ இந்தியாவிற்கு டொமனியன் அந்தஸ்து வழங்கப்படும்.

- சிறுபான்மையினர் பாதுகாப்பு - சுதேச அரசுகள் மற்றும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அரசியலமைப்புக் குழு ஏற்படுத்தப்படும்.
- பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள எந்த மாகாணமாவது இந்த அரசியலமைப்பை ஏற்க மறுக்கும் பட்சத்தில் தற்போதைய நிலையில் தொடரவோ அல்லது தங்களுக்கென தனி அரசியலமைப்பை வரைந்து கொள்ளவோ அனுமதிக்கப்படும் கிரிப்ஸின் யோசனைகளை நாட்டின் பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஏற்கவில்லை. காந்தி கிரிப்சின் யோசனைகளை **"பின் தேதியிட்ட காசோலை"** என்று வர்ணித்தார். சுதேச அரசுகள் விரும்பினால் அரசியலமைப்பு குழுவிற்கு தனது பிரதிநிதிகளை அனுப்பலாம் அல்லது இந்திய ஒன்றியத்திலிருந்து விலகியே இருக்கலாம் என்ற யோசனையை அரசியல் கட்சிகள் ஏற்கவில்லை.
- பாகிஸ்தான் கோரிக்கை ஏற்கப்படாததால் முஸ்லீம் லீக் இதனை நிராகரித்தது.

### 1. வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942 - 44):

- கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி, இந்தியா மீது ஜப்பான் படையெடுக்கும் என்ற அச்சம் போன்ற காரணங்களால் பிரிட்டிஷாரை நாட்டைவிட்டு வெளியேறச் செய்யும் இயக்கத்தை மகாத்மா காந்தி தொடங்கினார்.
- பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறினால் மட்டுமே ஓர் இடைக்கால அரசாங்கத்தை அமைக்க முடியும். இந்து, முஸ்லீம் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று காந்தி கருதினார்.
- 1942 ஆகஸ்ட் 8-ம் நாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடி புகழ் வாய்ந்த **"வெள்ளையனே வெளியேறு"** தீர்மானத்தை நிறை வேற்றியது. காந்தி **" செய் அல்லது செத்து மடி"** என்று அறைகூவரை விடுத்தார்.
- 1942 ஆக்ஸ்ட் 8, 9 - ம் தேதிகளில் காங்கிரசின் முக்கிய தலைவர்களை அரசாங்கம் கைது செய்தது. அரசின் இந்த திட்டமிட்ட நடவடிக்கையால் இந்திய மக்கள் இயக்கத்தை வழி நடத்த தலைவர்களின்றி விடப்பட்டனர். மகாத்மா காந்தி பூனா சிறையில் அடைக்கப்பட்டார். பண்டித

ஜவஹர்லால் நேரு, அபுல் கலாம் ஆசாத் போன்ற தலைவர்கள் அகமது நகர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.

- 1944-ல் மகாத்மா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.
- வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஒரு வன்முறை போராட்டமாகும்.
  இப்போராட்டத்தில் உஷா மேத்தா, அருணா ஆசப் அலி போன்றோர் **ரகசிய காங்கிரஸ் ரேடியோ** அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர்.
- இதில் பல இணை (அ) தனி அரசாங்கங்கள் (Parallel Govt's) ஏற்படுத்தப்பட்டன. 1942ல் பாலியா பகுதியில் சித்து பாண்டே இணை அரசாங்கத்தை ஏற்படுத்தினார்.

## 2. காபினெட் தூதுக்குழு (1940):

- இரண்டாம் உலகப்போருக்குப்பின், இங்கிலாந்து பிரதமராக அட்லி பிரபு பொறுப்பெற்றார். 1946 மார்ச் 15-ம் நாள் அவர் வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவின் சுயநிர்ணய உரிமையை ஏற்றதுடன் இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு ஒப்புதலையும் வழங்கினார்.
- பிரிட்டிஷ் அமைச்சரவையை சேர்ந்த மூன்று பேர் பெதிக் லாரன்ஸ், சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஏ.வி. அலெக்சாந்தர் கொண்ட குழுவை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். இதுவே "காபினெட் தூதுக்குழு" என்ற பெயரைப் பெற்றது.
- முஸ்லீம் லீக் காங்கிரஸ் இரண்டும் இத்திட்டத்தை ஒப்புக் கொண்டன.
- 1946 ஜூலையில் அரசியலமைப்புக் குழுவிற்கான தேர்தல்கள் நடைபெற்றன.
- 214 பொதுத் தொகுதிகளில் 205-ல் காங்கிரஸ் வெற்றி பெற்றது. **1946 செப்டம்பர் 2-ம் நாள் ஜவஹர்லால் நேரு தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது.**

| நபர்கள் | பதவிகள் |
|---|---|
| ஜவஹர்லால் நேரு | வெளிவிவகாரங்கள் மற்றும் பொதுவான செல்வ வளங்கள் |
| சர்தார் வல்லபாய் பட்டேல் | தகவல் மற்றும் ஒளிபரப்பு |
| டாக்டர் ராஜேந்திர பிரசாத் | உணவு மற்றும் வேளாண்மை |
| ஜஹ்சீவன் ராம் | தொழிலாளர் |
| சர்தர் பல்தேவ் சிங் | பாதுகாப்பு துறை |
| C.H. பாபா | வேலைகள், சுரங்கங்கள் மற்றும் ஆற்றல் |
| லியாகட் அலிகான் | நிதியமைச்சர் |
| C.ராஜகோபாலசாரி | கல்வி அமைச்சர் |
| ஜோதிந்தர் நாத் மண்டல் சுந்திரிகர் | வணிகம் |

### 3. மௌண்ட்பேட்டன் திட்டம் (1947):

- 1947 பிப்ரவரி 2- ஆம் நாள் பிரதமர் அட்லி பொது அவையில் (House of Commons)1948 ஜூன் மாதத்திற்கு முன்புஇந்தியர்களிடம் ஆட்சி அதிகாரம் மாற்றப்படும் என்ற பிரிட்டிஷ் அரசின் திட்டமான எண்ணத்தை அறிவித்தார்.
- இதனை நிறைவேற்றுவதற்கு மௌண்ட் பேட்டன் பிரபுவை இந்தியாவின் வைஸ்ராயாக அனுப்புவது என்றும் அவர் முடிவு செய்தார்.
- 1947 மார்ச் 24-ம் நாள் மிகுந்த அதிகாரங்களுடன் மௌண்ட்பேட்டன் பிரபு இந்தியாவின் வைஸ்ராயாக பதவியேற்றார். இந்தியாவை பிரித்து பாகிஸ்தானை உருவாக்குவது என்பது தவிர்க்க முடியாதது என்று அவர் கருதினார்.
- நீண்ட விவாதங்களுக்குப் பிறகு 1947 ஜூன் 3-ம் நாள் இந்தியப் பிரிவினைக்கான தனது திட்டத்தை அவர் அறிவித்தார். காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் இத்திட்டத்தை ஒப்புக் கொண்டது.

### 4. இந்திய விடுதலைச் சட்டம் (1947):

- மௌண்ட் பேட்டன் திட்டத்தை ஏற்றுக்கொண்ட **பிரிட்டிஷ் அரசாங்கம் 1947 ஜூலை 18-ம் நாள் இந்திய விடுதலைச் சட்டத்தை நிறைவேற்றியது.**

**இச்சட்டத்தின் முக்கிய கூறுகள்:**

- இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை 1947 ஆகஸ்டு 15 முதல் நடைமுறைக்கு வரும். பிரிட்டிஷ் அரசங்கம் அனைத்து அதிகாரங்களையும் இவ்விரண்டு நாடுகளிடம் வழங்கும்.
- பஞ்சாப், வங்காளம் இவ்விரண்டு மாகாணங்களின் எல்லைகளை வரையறுப்பதற்கு எல்லை வரையறுக்கும் ஆணையம் ஏற்படுத்தப்படும்.
- இவ்விரண்டு நாடுகளின் அரசியலமைப்பு குழுக்களுக்கு அரசியலமைப்பை உருவாக்கும் அதிகாரங்கள் வழங்கப்படும்.
- ராட்கிளிப் தலைமையிலான எல்லை வரையறுக்கும் ஆணையம் இந்திய - பாகிஸ்தான் எல்லைகளை வரையறுத்தது. 1947 ஆகஸ்டு 15-ம் நாள் இந்தியாவும், ஆகஸ்டு 14-ம் நாள் பாகிஸ்தானும் சுதந்திர நாடுகளாயின. சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராக மௌண்ட்பேட்டன் பிரபு பொறுப்பு ஏற்றார் பாகிஸ்தானின் முதல் தலைமை ஆளுநராக முகமது அலி ஜின்னா பதவியேற்றார். 1948

ஜனவரி 30-ம் நாள் மிகவும் சோகமான நிகழ்ச்சியும் நடந்தேறியது. தேசத் தந்தை மகாத்மா காந்தியை அவர் வழிபாட்டுக் கூட்டத்துக்குச் செல்லும் வழியில் நாதுராம் கோட்சே சுட்டுக்கொன்றார்.

**பிரெஞ்சு மற்றும் போர்ச்சுக்கீசிய பகுதிகள் இணைக்கப்படுதல்**

**பிரெஞ்சுப் பகுதிகள் இணைக்கப்படுதல் (1954):**

❖ பிரெஞ்சு அரசின் அனுமதியுடன் பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் மற்றும் சந்திரநாகூர் ஆகிய பகுதிகள் 1954-ம் ஆண்டு இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டன.

**போர்ச்சுக்கீசியர்கள் பகுதிகள் இணைப்பு (1961)**

கோவா, டையூ மற்றும் டாமன் ஆகிய பகுதிகள் போர்ச்சுக்கீசியரின் வசமிருந்த பகுதிகளாகும்.அப்பகுதி மக்கள் இந்தியாவுடன் இணைய விரும்பினர். எனவே, இந்திய அரசு தனது இராணுவ நடவடிக்கைகளின் மூலம் 1961 - ம் ஆண்டு அப்பகுதிகளை இந்தியாவுடன் இணைந்தன.

| ஆண்டு/ இடம் | தலைவர் | தகவல் |
|---|---|---|
| 1885 (டிசம்பர்28) மும்பை | W.C. பானர்ஜி | 72 பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர். |
| 1886 (டிசம்பர்28) கல்கத்தா | தாதாபாய் நௌரோஜி | 436 பிரதிநிதிகள் |
| 1887 (டிசம்பர் 27-28) மதராஸ் | பத்ரூதீன் தியாப்ஜி (முதல் முஸ்லீம் தலைவர் ) | 607 பிரதிநிதிகள் முஸ்லீம் கலந்துக் கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 1885 (டிசம்பர் 28-29) அலகாபாத் | ஜார்ஜ் யோல் | முதல் பிரிட்டிஷ் தலைவர் |
| 1889 (டிசம்பர் 27-28) கல்கத்தா | வில்லியம் வெண்டர்பன் | |
| 1890 (டிசம்பர் 28-29) கல்கத்தா | ப்ரோஸா மேத்த | |
| 1891 (டிசம்பர் 26-27) நாக்பூர் | பி. ஆனந்த் சாரு | |
| 1892 (டிசம்பர் 28-29) அலகாபாத் | W.C. பானார்ஜி | |
| 1893 (டிசம்பர்27- 28) லாகூர் | தாதாபாய் நௌரோஜி | |

| | | |
|---|---|---|
| 1894 (டிசம்பர்27- 28) மதராஸ் | அல்ரடு வெப் | |
| 1895 (டிசம்பர்28- 29) பூனா | சுரேந்திரநாத் பானர்ஜி | |
| 1896 (டிசம்பர்27- 28) கல்கத்தா | ரோகினில்லா செய்னி | |
| 1897 (டிசம்பர்22- 29) அமராவதி | C. சங்கர் நாயர் | |
| 1898 (டிசம்பர்27- 28) மதராஸ் | A.M. போஷ் | |
| 1899 (டிசம்பர்27- 28) லக்னோ | ரமேஷ் சந்திராதட் | நில வருவாயை நிரந்தரமாக சரி செய்தவற்கான கோரிக்கை |
| 1900 (டிசம்பர்27- 29) லாகூர் | N.G. சந்திர சேகர் | |
| 1901 (டிசம்பர் 27 - 28) கல்கத்தா | DE வாட்சா | |
| 1902 (டிசம்பர்23- 26) அகமதாபாத் | சுரேந்திர நாத் பானர்ஜி | |
| 1903 (டிசம்பர்28- 30) மதராஸ் | லால் மோகன் கோஷ் | |
| 1904 (டிசம்பர்26- 28) மும்பை | ஹென்ரி காட்டன் | |
| 1905 (டிசம்பர்27 -30) பனாரஸ் | G.K. கோகலே | பெங்காலின் பிரிவினைக்கு எதிர்ப்பு |
| 1906 (டிசம்பர்26- 29) கல்கத்தா | தாதாபாய் நௌரோஜி | சுயராஜ்ஜியம் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது. |
| 1907 (டிசம்பர்26- 27) சூரத் | ராஸ் பிஹாரி கோஷ் | காங்கிரஸ் மிதவாதிகள்/ தீவிரவாதிகள் என பிரிந்தனர் |
| 1908 (டிசம்பர்29- 30) சூரத் | ராஸ் பிஹாரி கோஷ் | காங்கிரஸின் அரசியலமைப்பு வரையப்பட்டது. |
| 1909 (டிசம்பர்27- 30) லாகூர் | மதன் மேகான் மாளவியா | |
| 1910 (டிசம்பர்28- 29) அலகாபாத் | சர் வில்லியம் வெண்டர்பன் | |
| 1911 (டிசம்பர்26- 28) கல்கத்தா | BN தார் | |

| | | |
|---|---|---|
| 1912 (டிசம்பர்27- 28) பக்கின்பூர் | RN முதேல்கர் | |
| 1913 (டிசம்பர்26- 29) கராச்சி | முகமுது | |
| 1914 (டிசம்பர்28- 30) மதராஸ் | புபேந்திர நாத் பாஸ் | |
| 1915 (டிசம்பர்27- 30) மும்பை | SP சிங்கா | |
| 1916 (டிசம்பர்26- 30) லக்னோ | A.C. முஜ்ம்தார் | காங்கிரஸ் லக்னோ உடன்படிக்கையில் மீண்டும் இணைந்தது. |
| 1917 (டிசம்பர்28- 29) கல்கத்தா | அன்னிபெசன்ட் | முதல் பெண் தலைவர் |
| 1918 (டிசம்பர்26- 31) டெல்லி | மதன் மோகன் மாளவியா | |
| 1919 (டிசம்பர்27- 28) அம்ரித்சர் | மோதிலால் நேரு | கண்டிக்கப்பட்ட ஜல்லிவன் வாலா பீக் கிலா டத் இயக்கம் அதிகரித்தது. |
| 1920 (டிசம்பர்26- 31) நாக்பூர் | C. விஜயா ராகவாச்சாரியா | காங்கிரஸ் புதிய அரசியலமைப்பை உருவாக்கியது. |
| 1921 (டிசம்பர்27- 31) அகமாதபாத் | சி.ஆர்.தாஸ் ஹாங்கிம் ஹான் | |
| 1922 (டிசம்பர்26- 31) காயா | சி.ஆர். தாஸ் | சுயராஜ்ய கட்சி தோற்றுவிக்கப்பட்டது. |
| 1923 (டிசம்பர்28- 31) காகின்தா | M. முதமத் அலி | |
| 1924 (டிசம்பர்26- 27) பெல்ஹம் | M.K. காந்தி | |
| 1925 (டிசம்பர்26- 28) கான்பூர் | சரோஜினி நாயுடு | முதல் இந்திய பெண் தலைவர் |
| 1926 (டிசம்பர்26- 28) ஹெளகாத்தி | SS ஐயங்கர் | |
| 1927 (டிசம்பர்26- 27) மதராஸ் | MA அன்சாரி | சுதந்திர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது மற்றும் சைமன் கமிஷன் புறக்கணிக்கப்பட்டது. |
| 1928 (டிசம்பர்28- 31) கல்கத்தா | மோதிலால் நேரு | அனைத்து இந்தியா காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. |
| 1929 (டிசம்பர்29- 31) லாகூர் | ஜவஹர்லால் நேரு | பூர்ன சுயராஜ்ஜிய தீர்மானம் உருவாக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 1931(மார்ச்29) கராச்சி | வல்லபாய் பட்டேல் | காந்தி இர்வின் ஒப்பந்தத்தில் அடிப்படை உரிமைகளின் தீர்மானம் அனுப்பப்பட்டது. |
| 1932 (ஏப்ரல்24) டெல்லி | Ar சேத் | |
| 1933 (ஏப்ரல்7) கல்கத்தா | N. சென்குப்தா | |
| 1934 (அக்டோபர் 26 - 28) மும்பை | இராஜேந்திர பிரசாத் | |
| 1936 (ஏப்ரல் 12 -4) லக்னோ | ஜவஹர்லால் நேரு | பொது உடைமைக் கோட்பாட்டை அடைவதே காங்கிரஸின் குறிக்கோளாகும். |
| 1936 (டிசம்பர்27- 28) பஜ்ஜிபூர் | ஜவஹர்லால் நேரு | முதன் முதலில் கிராமப்புற பகுதியில் அமைக்கப்பட்டது. |
| 1938 (பிப்ரவரி19- 21) ஹரிபுரா | SC Bose | தேசிய திட்டக் கமிஷன் உருவாக்கப்பட்டது. |
| 1939 (மார்ச்10) திரிபுரா | SC Bose | இராஜேந்திர பிரசாத் தலைவராக அறிவிக்கப்பட்டார் |
| 1940 (மார்ச்) ராம்ஹர்த் | மாவுனா ஆசாத் | |
| 1946 (நவம்பர்22) மீரட் | JB கிரிபாலனி | |
| 1948 (டிசம்பர்18-19) ஜெயப்பூர் | P. சித்தராமையா | |

# இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கான முன்னேற்றங்கள்

- ❖ ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி வங்காளத்திலும் இந்தியாவிலும் பிற பகுதிகளிலும் சுதேச அரசுகளின் ஆதரவைப் பெற்று வியாபாரத்தை வளர்த்து வந்தது. பதினேழாம் நூற்றாண்டின் இறுதி வரை கம்பெனியின் அதிகார வளர்ச்சி மன்னரின் விருப்பத்தை பொறுத்ததாகவே இருந்தது.
- ❖ ஆனால் அதற்கு பிறகு கம்பெனியின் செயல்பாடுகள் திருப்தி தரக்கூடியதாக இல்லை. எனவே பிரிட்டிஷ் பாராளுமன்றம் கம்பெனியை கண்காணிக்கவும், அதன் நிர்வாகத்தில் காணப்பட்ட குறைபாடுகளை களையவும் முயற்சிகள் மேற்கொண்டது.

**ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி (1773 - 1858):**

**1. ஒழுங்கு படுத்தும் சட்டம் 1773 (Regulating Act 1773):**

- ❖ ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் விவகாரங்களை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் இங்கிலாந்து பாராளுமன்றத்தால் இற்றப்பட்ட முதலாவது சட்டமே ஒழுங்குபடுத்தும் சட்டம் ஆகும். இதனால் கம்பெனிக்கு ஒரு புதிய அரசியலமைப்பு உருவானது. இந்தியாவில் மைய ஆட்சி முறை ஏற்பட முதல் படியாக அமைந்தது.

**முக்கிய ஷரத்துக்கள் (Features):**

1. ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி வங்காளத்தின் கவர்னர் வில்லியம் கோட்டையின் கவர்னர் ஜெனரல் என அழைக்கப்பட்டார். கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூற நான்கு உறுப்பினர்களை கொண்ட நிர்வாக குழு ஏற்படுத்தப்பட்டது. அதன் தலைவர் கவர்னர் ஜெனரல் ஆவார். நான்கு உறுப்பினர்கள் முறையே கிளாவரிங் மான்சன், பிரான்சிஸ், பார்வல் ஆவார். வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு வில்லியம் கோட்டையின் முதல் கவர்னர் ஜெனரல் ஆவார்.
2. முன்பு போல் இல்லாமல், மதராஸ் மற்றும் பம்பாய் மாகாண கவர்னர்கள் வில்லியம் கோட்டையின் கவர்னர் ஜெனரலுக்கு கீழ்பட்டவர்கள் மற்றும் கட்டுப்பட்டவர்கள் ஆவர்.

3. ஒரு தலைமை நீதிபதியும், மூன்று நீதிபதிகளும் அடங்கிய ஒரு தலைமை நீதிமன்றம் கல்கத்தாவில் (1744)ல் அமைக்கப்பட்டது. தலைமை நீதிபதியாக எர் எலிஜா இம்பே என்பவரும்: சேம்பர்ஸ், லெமாய்சர், ஹைட் ஆகியோர் பிற நீதிபதிகளாகவும் நியமிக்கப்பட்டனர்.
4. கம்பெனி ஊழியர்கள் தனியாக வியாபாரம் செய்யவும் மற்றும் இந்தியரிடமிருந்து அன்பளிப்போ, இலஞ்சமோ பெறவும் தடை விதித்தது.
5. கம்பெனியின் வரவு செலவு கணக்குகள் இங்கிலாந்து அமைச்சரவை முன் வைக்கப்பட வேண்டும். மேலும் நிலவரி சம்பந்தமாக இந்தியாவிலிருந்து வரும் எல்லா கடிதங்கள் கருவூலத்துறையிலும், சிவில் ராணுவ கடிதப்போக்குவரத்துக்களை இங்கிலாந்தில் வெளியுறவுத்துறை செயலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**2. வங்காள நீதி பரிபாலன சட்டம் (Bengal Judicature Act 1781 (or) Act of Settlement 1781):**

❖ ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் நீதித்துறை சம்பந்தப்பட்ட குறைபாடுகளை நீக்கியது. முக்கியமாக கல்கத்தா தலைமை நீதிமன்றத்திற்கும் கவர்னர் ஜெனரலின் ஆலோசனை குழுவிற்கும் இடையே ஏற்பட்ட சச்சரவுகளை நீக்கியது. இச்சட்டத்தின்படி தலைமை நீதிமன்றம் ஓரளவு தனது அதிகாரத்தை இழக்க வேண்டியதாயிற்று.

**முக்கிய ஷரத்துக்கள் (Features):**

1. கவர்னர் ஜெனரலும் அவரது ஆலோசனை குழு உறுப்பினர்களும் வங்காள தலைமை நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல.
2. கம்பெனியின் வரிவசூல் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் இந்த நீதிமன்றத்திற்கு கிடையாது.

**3. பிட் இந்திய சட்டம் 1784 (Pitt's India Act 1784):**

❖ ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் குறைபாடுகளை நீக்குவதற்காக இங்கிலாந்து பிரதமர் வில்லியம் பிட் என்பவரால் கொண்டு வரப்பட்ட சட்டமே பிட் இந்திய சட்டம் ஆகும்.

**முக்கிய ஷரத்துக்கள் (Features):**

1. கட்டுப்பாட்டு வாரியம் (Board of Control) இந்தியா சம்பந்தப்பட்ட அரசியல் நிர்வாக காரியங்களை கவனிப்பதற்கு கட்டுப்பாட்டு வாரியம் என்ற ஆணையர்கள் (MP) அல்லது பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட புதிய சபை ஏற்படுத்தப்பட்டது.

2. இந்தியாவில் கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கிலிருந்து மூன்றாக குறைக்கப்பட்டது.
3. இந்திய மாகாணங்களில் கவர்னரின் ஆலோசனைக்குழு அமைக்கப்பட வழி செய்தது.
4. முதன்முதலாக இந்தியாவில் இருந்த கம்பெனியின் பகுதிகள் "இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் பகுதிகள் (British Possessions in India) என்று அழைக்கப்பட்டது.
5. கம்பெனி இயக்குநர்கள் குழு இனி வாணிபம் சம்பந்தப்பட்ட அலுவல்களை மட்டுமே கவனிப்பர். அரசியல் அலுவல்களை கட்டுப்பாட்டு வாரியம் எடுத்துக் கொண்டது. இப்படி இரண்டு வகை அரசாங்க (Double) முறையை அறிமுகப்படுத்தியது.

**4. 1786 ம் வருடச்சட்டம்:**

❖ ஒழுங்குப்படுத்தும் சட்டம் மற்றும் பிட் இந்திய சட்டம் ஆகியவற்றின் குறைபாடுகளை நீக்கவே கொண்டுவரப்பட்டது. குறிப்பாக கவர்னர் ஜெனரலுக்கும் அவரது ஆலோசனை குழுவிற்கும் இடையே ஏற்பட்ட சச்சரவுகளை நீக்க கொண்டு வரப்பட்ட சட்டமாகும்.

**முக்கிய ஷரத்துக்கள் (Features):**

1. கவர்னர் ஜெனரலுக்கு தனது ஆலோசனைக்குழுவின் பெரும்பான்மையோரின் முடிவைப் புறக்கணிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது.
2. கவர்னர் ஜெனரலே இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் படைத்தளபதியாக நியமிக்கப்பட்டார்.
3. ஆனால் கம்பெனி இயக்குநர்கள் குழுவின் அனுமதியின்றி கவர்னர் ஜெனரல் போர் பிரகடனம் செய்யக்கூடாது.

**5. பட்டய சட்டங்கள் (Charter Act):**

❖ கம்பெனி வியாபாரம் செய்வதற்கான முற்றுரிமை இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படவேண்டும். அதற்காக இங்கிலாந்து பாராளுமன்றத்திடம் இருபது ஆண்டுகளுக்கு ஒரு முறை விண்ணப்பிக்க வேண்டும்.

**(i) 1793 -ம் வருட பட்டயச்சட்டம் (Charter Act of 1793)**

❖ கம்பெனிக்கு 20 ஆண்டுகளுக்கு உரிமை அளிக்கும் முதல் பட்டய சட்டம் 1793 ல் கொண்டு வரப்பட்டது.

**முக்கிய ஷரத்துக்கள்:**

1. கம்பெனியின் வியாபார முற்றுரிமை மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.
2. இச்சட்டப்படி கவர்னர் ஜெனரலுக்கு மாகாணங்களில் "அமைதி கான்

நீதிபதி" (Justices of Peace) நியமிக்க உரிமை கொடுக்கப்பட்டது.

3. கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆணையர்களின் எண்ணிக்கை ஆறிலிருந்து ஐந்தாக குறைக்கப்பட்டது. மேலும் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு ஆகும் செலவுகளை இந்திய வருமானத்திலிருந்தே கொடுக்க வேண்டும்.

**(ii) 1813 -ம் வருட பட்டய சட்டம் (Charter Act of 1813)**

❖ 1793 -ம் வருட பட்டய சட்டப்படி கம்பெனிக்கு இருபது வருட காலத்திற்கு வழங்கப்பட்ட வியாபார முற்றுரிமைக்காலம் முடிவடையவே கம்பெனி நிர்வாகத்தினர் அந்த சாசனத்தை புதுப்பித்தனர். அதன் அடிப்படையில் கொண்டு வரப்பட்டதே 1813 -ம் வருட பட்டய சட்டமாகும்.

**முக்கிய ஷரத்துக்கள்:**

1. கம்பெனியின் வாணிப முற்றுரிமை (Monopoly of Trade) ஒழிக்கப்பட்டது. வியாபாரம் செய்யும் உரிமை 20 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது. இங்கிலாந்து மக்கள் அனைவரும் இந்தியாவுடன் வாணிபம் செய்யும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் தேயிலை, கஞ்சா முதலிய பொருட்களை சீனாவிற்கு விற்பதில் கம்பெனி பெற்றிருந்த முற்றுரிமை (Monopoly) மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.
2. கிறிஸ்துவ மதத்தைப் பரப்ப மிஷினரிமார்கள் இந்தியாவிற்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டது.
3. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் பகுதிகளில் வாழும் மக்களின் கல்வி, பண்பாட்டு, அறிவியல் வளர்ச்சிக்கு கம்பெனியின் லாபத்திலிருந்து ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.
4. சிவில் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க நிலையமும், ராணுவ ஊழியர்களுக்கு அடிஸ் கோம்ப் என்ற இடத்தில் ஒரு பயிற்சி நிலையமும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.
5. கல்கத்தாவில் உள்ள ஐரோப்பியர்களின் நலனுக்காக ஒரு பிஷப்பும் அவருக்கு உதவி செய்வதற்காக மூன்று துணை அலுவலர்களும் நியமிக்கப்பட்டார்கள். இந்த பிஷப்பின் நியமனம் இந்தியாவில் திருச்சபை வரலாற்றின் தொடக்கமாக அமைந்தது.

**(iii) 1833 -ம் வருட பட்டயச் சட்டம்:**

❖ இந்தியாவில் மைய அரசாங்கம் அமைய எடுக்கப்பட்ட கடைசி

நடவடிக்கை இந்த பட்டயச் சட்டமாகும். இச்சட்டத்தில் சிறந்த கற்றறிவாளரான மெக்காலே பிரபு, பொருளாதார மேதை ஜேம்ஸ்மில் ஆகியோரின் கருத்துக்களை காணமுடிகிறது.

**முக்கிய ஷரத்துக்கள்:**

1. வில்லியம் கோட்டையின் கவர்னர் ஜெனரல் இச்சட்டத்தின்படி இந்தியாவின் கவர்னர் ஜெனரல் என அழைக்கப்பட்டார். இவரே வங்காளத்தின் கவர்னராகவும் இருப்பார். கவர்னர் ஜெனரலும் அவரது ஆலோசனை சபையும் தங்கள் ஆட்சியின் கீழ் இருக்கும் மாகாணங்கள் மீது மேற்பார்வையிடுதல், கட்டளையிடுதல், கட்டுப்பாடு செய்தல் போன்ற அதிகாரங்களை பெற்றார்கள். இந்தியா முழுமைக்குமான "ஒரே வரவு செலவு திட்டம் " கவர்னர் ஜெனரலினால் தயாரிக்கப்பட வேண்டும். இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் பிரபு ஆவார்.ஆலோசனை சபையில் கூடுதலாக சட்ட உறுப்பினர். ஒருவர் நியமிக்கப்பட்டார். (மெக்காலே பிரபு)
2. மாகாணங்கள் தங்களுக்கென சட்டமியற்றிக் கொள்ளும் உரிமைகளை இழந்தன.
3. கம்பெனியின் வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் முடிவுக்கு வந்தன. இனிமேல் கம்பெனி இங்கிலாந்து அரசரின் சார்பாக நிர்வாகத்தை மட்டுமே நடத்தி வரவேண்டும். சீனாவுடன் கம்பெனிக்கு இருந்த முற்றுரிமையும்(Monopoly) நீக்கப்பட்டது.
4. மத்திய சட்டமன்றம் அல்லது பாராளுமன்றத்தின் தொடக்கமாக இச்சட்டம் அடிகோலியது.
5. கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் இனி இந்தியாவிற்கான அமைச்சர் (Minister for Indian Affairs)என்று அழைக்கப்படுவார்.
6. குடிமைப்பணியாளர்களை தேர்வு செய்ய திறந்த போட்டித் தேர்வுகளை அறிமுகப்படுத்த முயற்சி செய்தது. ஆனால் கம்பெனி இயக்குநர்களின் எதிர்ப்பால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

மார்லி பிரபுவின் கருத்துப்படி 1909 வரை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களில் 1833 -ம் பட்டய சட்டமே மிக முக்கியமான சட்டமாகும்.

### (iv) 1853-ம் வருட பட்டய சட்டம்(Charter Act of 1853):

பட்டய சட்டங்களில் இறுதியாக கொண்டு வரப்பட்ட சட்டமாகும்.

முக்கிய ஷரத்துக்கள் (Provisions):

1. சட்டமியற்றும் பணிக்காக கவர்னர் ஜெனரலின் சட்டமியற்றும் கவுன்சிலில் மேலும் 6 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்.
2. குடிமைப்பணியாளர்களை தேர்வு செய்ய திறந்த போட்டித் தேர்வுகளை அறிமுகப்படுத்தியது. இந்தியர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இதற்காக 1854-ல் மெக்காலே தலைமையில் இந்திய குடிமைப்பணிகள் கமிட்டி அமைக்கப்பட்டது.
3. கவர்னர் ஜெனரலின் கவுன்சிலின் சட்டமியற்றும் பணியும், நிர்வாகப்பணியும் முதன் முதலில் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டது.
4. முதன்முதலாக உள்நாட்டு மக்களுக்கு இந்திய பாராளுமன்றத்தில் சம பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. அதாவது கவர்னர் ஜெனரலின் சட்டமியற்றும் கவுன்சிலுள்ள 6 பேரில் 4 பேர் மதராஸ், பம்பாய், வங்காளம் மற்றும் ஆக்ரா மாகாண அரசாங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.
5. கம்பெனி ஆட்சி உரிமை 20 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படவில்லை.
6. வங்காளத்திற்கு தனியாக கவர்னர் நியமனம்.
7. இயக்குநர்களின் எண்ணிக்கை 24 லிருந்து 18 ஆக குறைக்கப்பட்டது. 18 பேரில் 6 பேர் மன்னரால் நியமிக்கப்படுபவர்.

### 6. மகாராணி ஆட்சி (Crown rule 1858 - 1947):

### 1858 - ம் வருட இந்திய அரசுச்சட்டம் (Government of India Act 1858)

- ❖ 1857 -ம் வருடம் இந்தியாவில் ஆங்கில ஆட்சிக்கு எதிராக ஏற்பட்ட சிப்பாய் கலகத்தின் விளைவாகவே 1858-ம் வருடச்சட்டம் இயற்றப்பட்டதும் அதன் தொடர்ச்சியாக கம்பெனி ஆட்சி ஒழிக்கப்பட்டு அரசியாரின் ஆட்சி ஏற்பட்டதும் ஆகும். ஆங்கில அரசாங்கமே இந்திய நிர்வாகத்தை நேரடியாக எடுத்துக் கொண்டது.
- ❖ இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் இச்சட்டம் சிறப்பிடம் பெறுகிறது. இது இந்தியாவில் மிகச்சிறந்த அரசை உண்டாக்குவதற்கான சட்டம் என அழைக்கப்பட்டது.

**சிறப்பு அம்சங்கள் (Salient Features)**

1. இந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது. இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பதவி இங்கிலாந்து அரசபிரதிநிதி (Viceroy) என மாற்றப்பட்டது. கானிங் பிரபு இந்தியாவின் முதல் வைசிராய் ஆவார்.
2. இங்கிலாந்து அரசியே வைசிராய், மாகாண கவர்னர்களை நியமிப்பார். அரசியின் ஒப்புதலுடன் துணை நிலை

ஆளுநர்களை நியமனம் செய்யும் உரிமை வைசிராய்க்கு கொடுக்கப்பட்டது. வெளியுறவுத்துறை செயலர் மத்தியிலும் மாகாணங்களிலுமுள்ள கவுன்சில்களின் உறுப்பினர்களை நியமனம் செய்யும் அதிகாரம் பெற்றார்.

3. கட்டுப்பாட்டு வாரியமும், இயக்குநர்கள் குழுவும் ஒழிக்கப்பட்டது. இவைகளின் பொறுப்புகள் அனைத்தும் இந்தியா அரசு செயலரிடம் (Secretary of State) ஒப்படைக்கப்பட்டது. இந்தியா அரசு செயலர் இங்கிலாந்து அமைச்சரவையின் கேபினட் பதவி வகித்தார். எனவே அவர் இந்தியா அமைச்சர் என்று அழைக்கப்பட்டார். அவருக்கு ஆலோசனை கூற பதினைந்து பேர் கொண்ட இந்தியா கவுன்சில் ஏற்படுத்தப்பட்டது. அந்த கவுன்சிலின் தலைவர் இந்தியா அரசு செயலர் ஆவார்.
4. இந்தியா கவுன்சிலின் செலவுகள் அனைத்தும் இந்திய வருமானத்திலிருந்தே செய்யப்பட வேண்டும்.
5. இந்திய ஆட்சிப் பணித்துறைக்கு பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான சட்டதிட்டங்களை உருவாக்க இந்தியா அரசு செயலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.
6. கம்பெனியின் ராணுவமும், கப்பற்படையும் இங்கிலாந்து அரசாங்கத்தின் பொறுப்பிற்கு மாற்றப்பட்டது.
7. இந்திய நிர்வாகத்தை இங்கிலாந்து அரசியார் ஏற்றுக்கொண்ட செய்தியை இந்திய அரசர்களிடமும் மக்களிடமும் முறைப்படி தெரிவிக்கப்படவேண்டும். இதன் அடிப்படையில் அலகாபாத் தர்பாரில் வைசிராய் கானிங்பிரபு ஒரு பிரகடனத்தின் மூலம் 1858 நவம்பர் 1 ல் மகாராணியின் பேரறிவிப்பை வெளியிட்டார்.

**7. இந்திய கவுன்சில் சட்டங்கள்:**

- இந்திய கவுன்சில் சட்டங்கள் சட்ட கவுன்சில்களில் இந்தியர்களை உறுப்பினர்களாகச் சேர்வதற்கு வசதி செய்து கொடுத்தது. மாகாண சட்டமன்றங்கள் தாங்கள் இழந்த உரிமைகளை மீட்டுக் கொண்டன.
- இங்கிலாந்து பிரதமரான கிளாட்சனின் சுதந்திர மனப்பான்மையின் எதிரொலியை இச்சட்டங்களில் காணமுடிகின்றது. இனி வரவிருக்கின்ற சட்டங்களுக்கு ஆதாரமாகவும் முன்னோடியாகவும் விளங்கியது.

**(i) 1861 -ம் வருட இந்திய கவுன்சில் சட்டம் (Indian Council Act ): முக்கிய ஷரத்துக்கள்:**

1. வைசிராய், அதிகாரிகள் அல்லா (non - official) சில இந்தியர்களை சட்டமியற்றும் பணியில் நியமிக்க அனுமதி வழங்கப்பட்டது. இதனடிப்படையில் 1862 ல் வைசிராய்கானிங் பிரபு, பெனாரஸின் ராஜா, பாட்டியாலாவின் மகாராஜா மற்றும் சர் தீன்கர் ராவ் ஆகிய மூவரையும் தனது கவுன்சிலில் நியமித்துக் கொண்டார்.
2. பம்பாய், மதராஸ் மாகாண சட்டமன்றங்களின் சட்டமியற்றும் உரிமை திருப்பி அளிக்கப்பட்டது.
3. இலாக்கா ஒதுக்கீடு (Port folio System) செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
4. அவசர காலத்தில் கவுன்சிலின் அவசரசட்டம் (Ordinance) பிறப்பிக்க வைசிராய்க்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அந்த அவசர சட்டத்தின் ஆயுட்காலம் 6 மாதங்கள்.
5. வங்காளம், வடமேற்கு எல்லை மாகாணம் மற்றும் பஞ்சாப் பகுதிகளில் சட்டமன்றங்கள் முறையே 1862, 1866 மற்றும் 1897 ல் ஏற்படுத்தப்பட்டன.

**(ii) 1892 - ம் வருட இந்திய கவுன்சில் சட்டம் (Indian Council Act): முக்கிய ஷரத்துக்கள்:**

1. மைய சட்டமன்ற மற்றும் மாகாண சட்டமன்றங்களின் அதிகாரி அல்லாத (non - official) உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது.
2. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வரவு - செலவு திட்டத்தை விவாதிக்கவும், பொது நலன்கள் பற்றி கேள்வி கேட்கும் உரிமை வழங்கப்பட்டது.
3. அலுவல் சாராத உறுப்பினர்களை நியமனம் செய்ய மறைமுகத் தேர்தல் அறிமுகப்படுத்தப்பட்டது.

**(iii) இந்திய கவுன்சில் சட்டம் 1909 (மின்டோ - மார்லி சீர்திருத்தங்கள் 1909) (Minto Morley Reforms):**

❖ முதன் முறையாக தேர்தல்கள் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர் களை கொண்ட சட்டமன்றங்கள் அமைய இச்சட்டம் வழி வகுத்தது. பாராளுமன்ற முறை நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்தியாவில் ஏற்படுத்தப்படுவதற்கு மின்டோ - மார்லி சீர்திருத்தங்களே காரணமாகும். (மின்டோ - வைசிராய், மார்லி - இந்திய செயலர்) ஆகியோர் முயற்சியால் நிறைவேற்றப்பட்டதால் அது மின்டோமார்லி சீர்திருத்தங்கள் என பெயர் பெற்றது.

**முக்கிய ஷரத்துக்கள்:**

1. மைய சட்டமன்றத்தின் உறுப்பினர் களின் எண்ணிக்கை 16 லிருந்து 60 ஆக உயர்த்தப்பட்டது. மாகாணங்களுக்கு ஏற்ப மாகாண சட்டமன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டது.
2. உறுப்பினர்கள் துணைக்கேள்விகள் எழுப்பவும், தீர்மானங்கள் கொண்டு வரவும் அனுமதி அளிக்கப்பட்டன.
3. சாதி அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறையும், இஸ்லாமியருக்கு தனித்தொகுதியும் வழங்கப்பட்டது. இதனால் மின்டோ பிரபு தனித்தொகுதி முறையின் தந்தை (Father of Communal Electrorate) என அழைக்கப் படுகின்றார்.
4. முதன் முறையாக வைசிராய் மற்றும் மாகாண கவர்னர்களின் நிர்வாக குழுவில் இந்தியர்களை சேர்த்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. அவ்வாறு வைசிராயின் நிர்வாகக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்ட முதல் இந்திய சட்ட உறுப்பினர் சத்தியேந்திர பிரசாத் சின்ஹா என்பவராவார்.

### (iv) இந்திய அரசாங்க சட்டம் 1919 மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்த்திருத்தங்கள் (Montagu - Chelmsford Reforms 1919):

- ❖ இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய இச்சட்டம், மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையை அறிமுகப்படுத்தியது.
- ❖ பொறுப்புள்ள அரசாங்கத்தை ஏற்படுத்தும் (Responsible Govt) நோக்கத்துடன் (செம்ஸ் போர்டு ___ கொண்டு வரப்பட்டது. வைசிராய், மாண்டேகு - இந்திய செயலர்) இது மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்த்திருத்தங்கள் என அழைக்கப்படுகின்றது.

**முக்கிய ஷரத்துக்கள்:**

1. மத்திய சட்டமன்ற கவுன்சிலில் இரு அவை முறை (மேலவை, கீழவை) அறிமுகப்படுத்தப்பட்டது.
2. மாகாணங்களில் இரட்டை ஆட்சிமுறை (Dyarchy)அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி மாகாண அரசின் பணிகள் ஆளுநரின் நிர்வாகத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட பணிகள் (ஒதுக்கப்பட்ட துறைகள்) எனவும், சட்டமன்றத்திற்குப் பொறுப்புடைய அமைச்சரின் கீழ் மாற்றப்பட்ட பணிகள் (மாற்றப்பட்ட துறைகள்) எனவும் பகிரிந்தளிக்கப்பட்டன.
3. முதன் முறை நேரடித் தேர்தல் நடை பெற வழி வகை செய்தது.
4. வைசிராயின் நிர்வாகக்குழுவிலுள்ள 6 பேரில் தலைமைப்படைத்தளபதி தவிர 3 பேர் இந்தியராக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தியது.

5. சீக்கியர்கள், இந்திய கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் மற்றும் ஐரோப்பியர்களுக்கு தனித்தொகுதிகளை தொடர்ந்து வழங்க அனுமதித்தது.
6. 1936 ல் மத்திய பொதுப் பணியாளர் தேர்வாணையம் ஏற்பட வழிவகை செய்தது.
7. பட்ஜெட்டுகள் மத்திய, மாகாண பட்ஜெட் என இரண்டாக பிரிக்கப்பட்டது. இந்திய வெளியுறவிற்காக லண்டனில் வெளியுறவு உயர் (High Commissioner) ஆணையர் பதவி ஏற்படுத்தப்பட்டது.

**(v) இந்திய அரசாங்க சட்டம் 1935 (Government of India Act):**

❖ 1935-ம் வருட இந்திய அரசாங்க சட்டம் இதுவரை இந்தியாவை ஆளுவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் தயாரித்த அரசியல் சாசனங்களிலெல்லாம் கடைசியானதும் பெரிதானதும் ஆகும். இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியின் முக்கியமான கட்டத்தைக் குறிக்கின்றது. இந்தச்சட்டம் மாநில அளவில் சுயாட்சியை முதல் முறையாக அளித்தது இச்சட்டமே ஆகும். 321 விதிகளையும் 10 அட்டவணைகளையும் கொண்டது.

**முக்கிய ஷரத்துக்கள்:**

1. இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் மாகாணங்களையும் இந்திய சுதேச அரசுகளையும் கொண்ட ஒரு அகில இந்திய கூட்டாட்சி (All india Federation) அமைக்கப்பட வழி வகுத்தது. எனினும் இறுதி வரை இது நடைமுறைக்கு வரவேயில்லை.
2. மாகாணங்களில் நடைபெற்று வந்த இரட்டை ஆட்சிமுறை (Dyarchy) ஒழிக்கப்பட்டு, மத்தியில் இரட்டை ஆட்சி அமல்படுத்தப்பட்டது. எனினும் மத்தியில் இது நடைமுறைக்கு வரவில்லை. மாகாணங்களில் சுயாட்சி (Provincial Autonomy) முறை புகுத்தப்பட்டது.
3. அரசாங்கத்தின் அதிகாரங்கள் கூட்டாட்சி பட்டியல், மாகாணப்பட்டியல், பொதுப்பட்டியல் என மூன்று பட்டியலாகப் பிரிக்கப்பட்டன. எஞ்சிய அதிகாரங்கள் வைசிராயிடம் ஒப்படைக்கப்பட்டன.
4. வங்காளம், சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பீகார் மற்றும் அஸ்ஸாம் மாகாணங்களில் இரண்டு அவைகளை கொண்ட சட்டமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.
5. ஒரு தலைமை நீதிபதி மற்றும் ஆறு நீதிபதிகளைக் கொண்ட கூட்டாட்சி

நீதிமன்றம் 1937ல் டெல்லியில் நிறுவப்பட்டது.

6. 1858 சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்திய கவுன்சில் ஒழிக்கப்பட்டது.
7. மொத்த மக்கட் தொகையில் 10லட்சம் பேர் வாக்குரிமை பெற்றனர்.
8. மத்திய ரிசர்வ் வங்கி ஏற்படுத்தப்பட்டது.
9. கூட்டாட்சி பொதுப்பணியாளர் தேர்வாணையம், மாகாண பொதுப்பணியாளர் தேர்வாணையம் மற்றும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்கு இணைப்பொதுப்பணியாளர் தேர்வாணையம் அமைக்க வழிவகை செய்தது.
10. பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது.
11. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடரப்பட்டது.

**(vi) இந்திய விடுதலைச்சட்டம் 1947 (Indian Independence Act):**

- ஜூன் 3, 1947 ல் கடைசி வைசிராயின் (மவுண்ட் பேட்டன்) திட்டத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதே இந்திய விடுதலைச் சட்டமாகும்.

**முக்கிய ஷரத்துக்கள்:**

- இந்தியா, பாகிஸ்தான் என்ற இரண்டு டொமினியன்கள் உருவாக்கப்படும். சுதேச அரசுகள் இரண்டில் ஏதாவது ஒன்றுடனோ அல்லது தனித்தும் இருக்க வழி வகை செய்தது.
- வைசிராய் பதவி ஒழிக்கப்பட்டு இரண்டு டொமினியன்களுக்கும் தனித்தனி கவர்னர் ஜெனரல்கள் இருக்க வழி வகை செய்தது. இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக மவுண்ட் பேட்டனும், பாகிஸ்தானுக்கு முகம்மது அலி ஜின்னாவும் இருந்தனர்.
- ஆகஸ்டு 15, 1947 லிருந்து பிரிட்டிஷ் பேரரசியின் பொறுப்புகள் இந்தியாவில் காலாவதி ஆகிவிடும்.
- இரு டொமினியன்களின் எல்லையை பகிர்ந்தளிக்க எல்லை ஆணையம் (ரெட்கிளிப்) ஏற்படுத்தப்படும்.
- ஆகஸ்டு 14-15 நள்ளிரவில் உலகமே உறங்கும் வேளையில் இந்தியா விழித்துக்கொண்டது. ஜவஹர்லால் நேரு இந்தியாவின் முதன் பிரதமராக பதவியேற்றார். மவுண்ட் பேட்டனுக்குப் பிறகு இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாக C. இராஜாஜி பொறுப்பேற்றார்.

# இந்தியாவில் நடைபெற்ற முக்கிய வழக்கு

## விசாரணைகள் அதன் முடிவுகள்

| வ. எண் | விசாரணை | வழக்கு | தீர்ப்பு |
|---|---|---|---|
| 1. | இரண்டாம் பகதூர் ஷா ஜாபர் ஜனவரி 27 - மார்ச்சு (1858) டெல்லி, செங்கோட்டை | 1857 புரட்சியில் ராஜ துரோகம் சதி, கலகம் மற்றும் கொலை | குற்றம் சாட்டப்பட்டு ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார். |
| 2. | சுரேந்திரநாத் பானர்ஜி மே 4 - 5, 1883 கல்கத்தா உயர்நீதிமன்றம் | The Bengalee - பத்திரிக்கைக்காக கோர்ட் அவமதிப்பு | 2 ஆண்டுகள் சிவில் சிறை தண்டனை |
| 3. | பாலகங்காதரதிலகர் 1897, 1908, 1916 | கேசரி பத்திரிக்கையில் அரசை கோபமூட்டும் தகவல்கள் | i) 1897 - 18 மாதங்கள் சிறைதண்டனை<br>ii) 1908 - 6 ஆண்டுகள் மண்டலேயில் சிறை தண்டனை மற்றும் 1000 அபராதம்<br>iii) 1916 - தண்டனை இல்லை. |
| 4. | அரவிந்த் கோஷ் மற்றும் 37 நபர்கள் (அலிப்பூர் பம்பாய் வழக்கு (1908 - 1909)) | முசாப்பர்பூர் மாவட்ட நீதிபதியை கொல்ல முயற்சி | விசாரணை கைதியாக 1 ஆண்டு சிறை |
| 5. | V.D. சவார்க்கர் 1910 மற்றும் ஜனவரி 1911. | ஆயுதங்கள் சப்ளை மற்றும் பிரிட்டிஷாரை கோபமூட்டும் விதமாக பேசுதல் | இரட்டை ஆயுள் நாடு கடத்தப்பட்டுதல் (50 - ஆண்டுகள் மற்றும் ஆனால் 10 ஆண்டுகள்) (1911 -21) அந்தமான் சிறையில் கழித்தார். |
| 6. | காந்தி மற்றும் யங் இந்தியாவின் வெளியீட்டாளர் | யங் இந்தியாவில் பிரிட்டிஷாரை கோபப்படுத்தும் | 6 ஆண்டுகள் சிறை தண்டனை. ஆனால் 1924ல் விடுவிப்பு |

வாய்மையே வெல்லும்

| | | | |
|---|---|---|---|
| | சங்கர்லால் பேங்கர் 1922 | விதமாக நான்கு செய்திகள். | |
| 7. | 31 கம்யூனிஸ்டுகள் (மீரட் சதி வழக்கு) மார்ச் 1929 | பிரிட்டிஷுக்கு எதிராக சதி | 3 ஆண்டுகளிலிருந்து ஆயுள் தண்டனைக்கு தண்டனைகள் மாறி மாறி வழங்கப்பட்டன. |
| 8. | பகத்சிங் ஜூன் 1929<br><br>ஜூலை 1929 | மத்திய சட்ட மன்றத்தில் வெடிகுண்டு தாக்குதல் போலீஸ் அதிகாரி சாண்டர்ஸை கொலை செய்தல் | ஆயள் தண்டனைக்கு நாடுகடத்தப்படுதல்.<br>மரண தண்டனை |
| 9. | M.N. ராய் | ராஜதுரோகம் மற்றும் சதி | 12 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு பிறகு 6 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. |
| 10. | ஷா நவாஜ்கான் பிரேம்குமார் சேகஸ் மற்றும் G.S தில்லான் (இந்திய தேசிய ராணுவ வழக்கு)(INA Trial) விசாரணை செங்கோட்டை, டெல்லி 1945 | கொலை செய்தல் மற்றும் கொலை செய்தலுக்கு ஆதரவு தந்து போரை நடத்துதல் | முதலில் விதிக்கப்பட்ட ஆயுட்கால தண்டனை தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் அபராதம் விதிக்கப்பட்டது. |

## புரட்சிகர நிகழ்வுகள் மற்றும் வழக்குகள்

| நிகழ்வுகள் | இடம் | ஆண்டு | குற்றச்சாட்டப்பட்டவர் |
|---|---|---|---|
| ரேண்ட் மற்றும் அமீஸ்ட்டின் கொலை | பூனே | 1897 | தாமேதர் மற்றும் பால்கிருஷ்ணா, சப்பேகர் சகோதரர்கள் |
| கிங்ஸ்போர்டை கொலை செப்பயம் முயற்சித்தல் | முஜாபூர் | 1908 | பரபுல்லா சக்கி, குத்ரம் போஸ் |
| மணிகட்டலா (கல்கத்தா) மற்றும் அலியூர் சதி வழக்கு | அலிபூர் | 1908 | அரபிந்த கோஷ் |
| ஜான்ஜன் கொலை வழக்கு | நாசிக் | 1909 | ஆனந்த் கர்கே |

| | | | |
|---|---|---|---|
| கர்சன் வாலி கொலை வழக்கு | லண்டன் | 1909 | மதன் லால் தீக்ரா |
| ஹார்டிஸ் கொலை முயற்சி (டெல்லி வழக்கு) | டெல்லி | 1912 | ராஜ் பிஹாரி போஸ் மற்றும் பெசன்ட்குமார் |
| கக்சோரி சதி வழக்கு | கக்கோரி | 1925 | ராம் பிரசாத் பிஸ்மிஸ் மற்றும் ஆசப் ருல்லா |
| சௌந்தர் கொலை வழக்கு (ASP. லாகூர்) | லாகூர் | 1928 | பகத் சிங் |
| சட்டமன்ற குண்டு வழக்கு | டெல்லி | 1929 | பகத்சிங் மற்றும் பட்டுகோல்வர் |
| மைக்கேல் லு —— டயர் கொலை வழக்கு | லண்டன் | 1940 | உத்தம் சிங் |
| சிட்டகாங்கில் ஆயுத்த கொலை | சிட்டகாஸ் | 1930 | சூர்யா சென் |

**குற்றவாளிகளுக்கு எதிரான முக்கிய வழக்குகள்**

| சதிவழக்கு | காரணம் மற்றும் வருடம் | தீர்வுகள் |
|---|---|---|
| நாசிக் சதி வழக்கு | கணேஷ் சவாக்கர் (1990 - 10) க்கு எதிரான தீர்ப்பில் நியாயமில்லாத தண்டனை | 37 இளைஞர்கள் பிடிப்பட்டனர், 3 பேர் தூக்கிலிடப்பட்டனர் மற்றும் மீதமிருந்தவர்களுக்கு பல்வேறு தண்டனைகள் வழுங்கினார் |
| அலிபூர் சதிவழக்கு | காவல் சிறையில் ஒரு குண்டு தொழிற்சாலை சோதனைக்கு உட்படுத்தப்பட்டு நேரடி வெடிகுண்டுகளை (1908) மீட்டது. | 37 பேர் ஹெம்சந்திரா கானுங்கோ உல்லாசர் தத், உபேந்திரநாத் பானர்ஜி உள்ளிட்டவர்கள் தண்டனைக்கு உட்பட்டனர். |
| ஹவ்ரா சதி வழக்கு | 1910 | கெஜின்தரா முகர்ஜி தண்டனைக்கு உட்பட்டார் |
| டெக்கான் சதிவழக்கு | ஆனாலிஸின் சமிதியின் உறுப்பினராக இருந்தார் (1910) | புளனா பிஹாரி தாஸ் 7 ஆண்டு கடுங்காவல் தண்டனை பெற்றார். |

| | | |
|---|---|---|
| டெல்லி சதி வழக்கு | ஹார்டிங் பிரபு வை கொலை முயற்சியால் குண்டு வெடிப்பு (1915) | மாஸ்டர் அமிர்கண்ட் ஆவத் பிஹாரி, பாய் பால் முகுந்த் ஆகியோர் இறப்புக்கு உள்ளானர்கள். |
| லாகூர் சதி வழக்கு | சாண்டாஸ் கொலை (1929 - 30) | சர்தார் பகத் சிங், ராஜ்குரு மற்றும் சுக்தவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர். |
| பனாரஸ் சதிவழக்கு | புரட்சிகர நடவடிக்கைகள் (1915 -16) | சுச்சிந்திர நாத் சன்யால் அந்தமானுக்கு நாடு கடத்தப்பட்டார். |
| விக்டோரியா சதி வழக்கு | கோமகத்த மாரு சம்பவம் காரணமாக அரசாங்கத்திற்கு எதிராக பொதுமக்கள் எழுந்தனர் | குருத்தா சிங் மற்றும் தலாங் சிங் ஆகியோர்க்கு 2 மற்றும் வருடம் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. |
| கக்கோரி சதி வழக்கு | அரசுக்கு சொந்தமான பணம் இரயலில் கொள்கை அடிக்கப்படுவதற்கு (1925) | ராம் பிரசாத் பிஸ்மில், ரோஷன் சிங், ஆசிப் உல்லா மற்றும் இராஜேந்திர லாகிரி ஆகியோருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. |
| பஞ்சாப் கொலை வழக்கு | பஞ்சாபின் ஆளுநரை கொலை செய்தவற்கு | ஹரி கிருஷ்ணாவிற்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. |